# அற்புதங்கள் தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்துகின்றன

*அற்புதங்களைத் தேவன் அதிசயமாய்ப் பயன்படுத்திய நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும், எவரொருவரும் பாவங்களுக்கான மன்னிப்பை அற்புதத்தினால் ஒருபொழுதும் பெற்றிருந்ததில்லை! அற்புதங்களை அவ்விதமான வழிமுறையில் தேவன் ஒருபொழுதும் பயன்படுத்தியதில்லை.*

*தேவனுடைய வசனத்தைக் கவனித்தவர்களின் இருதயத்தினுள் அவ்வசனத்தைக் கொண்டு வரவே அற்புதங்கள் சீராகப் பயன்படுத்தப்பட்டன. அற்புதங்கள் ஒருபோதும் எந்த ஒரு நபருடைய இருதயத்தையும் மாற்றவில்லை; தேவனிடமிருந்து வந்த சத்தியங்களே இருதயங்களை மாற்றின. வேதாகம வரலாறு முழுவதிலும் அற்புதங்கள் சீராகப் பயன்படுத்தப் பட்டிருப்பதை வேதாகம மாணவர்கள் கண்டுணர்ந்திருக்கலாம். இதற்கு முரண்பட்ட வகையில், தேவன் மனிதனுடன் செயல்பட்ட மாபெரும் மூன்று கால வெளிகளில் (விளக்கிக் கூற சுலபமானவைகள்) அற்புதங்கள் குறிப்பிட்ட வகையில் செயல் புரிந்துள்ளன.*

*(1) மோசேயின் காலம் மற்றும் ஊழியத்தில் தேவன் பயன்படுத்திய எல்லா அற்புதங்களையும் நினைவு கூருங்கள். ஆபிரகாம் தொடங்கி, பயண நாட்கள் மற்றும் யோசுவாவின் தலைமையில் கானான் நாட்டை வெற்றி கொள்வது வரையிலும் கூட, இஸ்ரவேல் நாட்டை ஸ்தாபிப்பதில் அற்புதங்கள் வழி நடத்தின. இந்த சகாப்தத்தின்போது நடந்த பல அற்புதங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கானான் நாட்டைச் சுதந்தரித்தபிறகு அற்புதங்களின் நிகழ்ச்சிகள் குறையத் தொடங்கின.*

*(2) மாபெரும் தீர்க்கதரிசிகளின் காலங்களில் இரண்டாம்*

முறையாக அற்புதங்கள் பெருகின. எலியா, எலிசா, ஏசாயா, தானியேல், எசேக்கியேல் இன்னும் மற்ற தீர்க்கதரிசிகளின் காலங்களில் தேவன் ஏராளமான அடையாளங்கள் மற்றும் அற்புதங்களினால் கிரியை செய்தார். நாட்கள் கடந்த போது பழைய ஏற்பாட்டு வரலாற்றின் கடைசிப் பகுதியான அடிமைத்தன காலங்களில் அற்புதங்கள் மறுபடியும் மறைந்து போயின.

(3) இயேசு மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் ஊழிய நாட்களில் மூன்றாம் முறையாக அற்புதங்கள், அடையாளங் கள் மற்றும் புதுமைகள் ஏராளமான அளவில் நடந்தன. இயேசுவின் வாழ்வு மற்றும் ஊழியத்தின்போது அவரே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியா, தேவகுமாரன் என்று நிரூபிப்பதற்கு பல அற்புதங்கள் உதவின. சுவிசேஷமானது ரோமராஜ்யம் முழுவதிலும் நடை போடுகையில், மற்றும் ஏவப்பட்ட மனிதர்கள் புதிய ஏற்பாட்டின் புத்தகங்களை எழுதுகையில் அற்புதங்கள் மிகக் குறைவாகவே பயன்படுத்தப் பட்டன. உண்மையில், பின் வருடங்களில்[1] எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் அற்புத நிகழ்ச்சிகள் அல்லது அடையாளங்கள் மற்றும் புதுமைகள் பற்றிய உபதேசங்கள் அரிதாகவே இருந்தன.

இம்மூன்று சகாப்தங்களுக்கும் புறம்பே அற்புத நிகழ்ச்சிகள் அவ்வப்போது காணப்பட்டன, ஆனால் “அதிகப் பெருக்க மான'' அற்புதங்கள் இம்மூன்று காலங்களில் மட்டுமே நடந்தன. இக்காலங்களில் தேவன் தமது வசனத்தை உலகிற்கு வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். சத்தியத்தை உலகிற்கு வெளிப்படுத்துதல் என்பதுடன் அற்புதங்களை இணையாக்கு தல் என்பது தற்செயலான நிகழ்ச்சியல்ல. தேவன் தமது சத்திய வசனங்களை வெளிப்படுத்துகையில் இப்படிப்பட்ட அடையா ளங்களினால் அவைகளை உறுதிப்படுத்தினார் என்பதைக் காண இன்றைய நாட்களில் வேதாகம மாணவர்கள் ஒரு தொலைநோக்குப் பார்வையை பயன்படுத்த முடியும். (1) மோசேக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது (2) மேசியாவின் மூலம் வரவிருந்த இரட்சிப்பைச் சுட்டிக் காட்ட தீர்க்கதரிசிகளுக்கு மேலும் வெளிப்படுத்துதல்கள் தரப்பட்டன (3) இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும் நிறைவான மற்றும் முழுமையான வெளிப்படுத்துதலான

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தப் பாடமானது, இயேசுவின் ஊழியம் மற்றும் அவரது சபையின் தொடக்க நாட்களில் நடந்ததாக புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏராளமான அற்புதங் களில் கவனம் செலுத்தும்.

## அற்புதங்களின் வாக்குத்தத்தம்

இயேசு, ஒரு சிறிய நிலப்பகுதியான பலஸ்தீனத்தில் மூன்றரை ஆண்டுகள் மட்டுமே போதித்தார். அவர் நாட்டுப் புறங்களில் தம்முடன் சுற்றுவதற்கும், எதிர்கால ஊழியத்திற் காகத் தமது போதனை மற்றும் பயிற்சியைப் பெறுவதற்கு பன்னிரெண்டு மனிதர்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்களைத் தனித்து விட்டு விடுவதில்லையென்றும் அவர் இப்பூமியி லிருந்து சென்ற பிறகு அவர்களுக்கு உதவுவதற்காகப் பரிசுத்த ஆவியானவர் அல்லது தேற்றரவாளன் என்று அழைக்கப்படும் துணையாளரை அனுப்புவதாகவும் அவர் கூறினார் (யோவா. 14:25, 26). இயேசு இப்பூமியில் இருந்த மூன்றரை ஆண்டு (ஊழிய நாட்)களில் அவரிடமிருந்து கேள்விப்பட்ட எல்லாவற்றையும் நிச்சயமாகவே அவர்கள் முழுமையாக நினைவில் வைத்துக் கொள்ள முடியாதிருந்ததால் அவரது போதனைகள் எல்லாவற்றையும் இவர் அவர்களுக்கு நினைப்பூட்டி உதவ வேண்டியிருந்தது.

தேவனுடைய வெளிப்படுத்துதலில் எஞ்சியிருந்தவை களையும் தேற்றரவாளன் அவர்களுக்குப் போதிக்க வேண்டிய தாயிருந்தது. ஆவியானவர் அவர்களுடைய ஆவிக்குரிய கல்வியை நிறைவு செய்பவராய் இருந்தார். அப்போஸ்தலர்கள் அறிய வேண்டியிருந்த யாவற்றையும் முதலில் இயேசு அவர்களுக்குப் போதிக்கவில்லை (யோவா. 16:4), ஏனென்றால் அப்படிப்பட்ட வெளிப்படுத்துதல் எல்லாவற்றையும் அவர் களால் தாங்கக் கூடாதிருந்தது (யோவா. 16:12). அவர் அப்போஸ்தலர்களின் அறிவு நிலையில், ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டியவற்றை அறிமுகப்படுத்த ''உருவக மொழியை'' (யோவா. 16:25) பயன்படுத்தியிருந்தார். பின்னால், ஏற்ற காலத்தில் தொடக்க கால சீஷர்களுக்குப் போதிக்கத் தேவையான மற்ற உபதேசங்களை ஆவியானவர்

*தேவனுடைய வசனத்தின் மூலம் அவர்களுக்குக் கொடுத்தார்.*

*இந்த வாக்குத்தத்தங்களின் வரிசையில், "விசுவாசிக்கிறவர்களால்" (மாற். 16:17) அடையாளங்கள் தொடரும் என்று இயேசு கூறினார். கேட்பவர்கள், அவர்களின் போதனைகள் தேவனிடத்திலிருந்து வந்தவை என்று நம்பத் தூண்டும்படியாக இந்த அடையாளங்கள் உறுதிப்படுத்தின. அசுத்த ஆவிகளைத் துரத்துதல், பற்பல பாஷைகளில் பேசுதல், பாம்புகள் மற்றும் விஷம் ஆகியவற்றால் பாதிக்கப்படாதிருத்தல் மற்றும் நோயாளிகளை அற்புதமாய்க் குணப்படுத்துதல் ஆகியவை இந்த அடையாளங்களில் அடங்கியிருந்தன (மாற். 16:17, 18).*

*இந்த அற்புதங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை மாற்கு மிகச் சரியாகப் பதிவு செய்திருக்கின்றார் என்ற உண்மையை வேதாகம மாணவர்களில் பலர் தவற விட்டு விடுகின்றார்கள்! தற்காலத்தில் "அற்புதம் செய்யும் ஊழியர்கள்" உரிமை கோரும் வழியைப் போன்ற ஏதொன்றிலும் அவை பயன்படுத்தப்படவில்லை! மாறாக, மாற்கு 16:20ல் இந்த அடையாளங்கள் யாவும் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வசனத்தை உறுதிப்படுத்தவே பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.*

## அற்புதங்களின் நோக்கம்

**தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்த**

*நடபடிகளில் குறிப்பாக குறிப்பிட்டபடியாக அப்போஸ்தலர்களின் போதக ஊழியத்தை இந்த அடையாளங்கள் தொடர்ந்ததினால் அற்புதங்களைத் தேவன் பயன்படுத்தியமை பற்றி நாம் ஒரு புரிந்து கொள்ளுதலை அடைய வேண்டியது அவசியமாகின்றது. இந்த அற்புதங்கள் பார்ப்பவர்களை வரம்பு கடந்த பொழுதுபோக்கில் திகைப்படையச் செய்வதற்காகவோ, அவைகளைச் செய்யக் கூடியவர்கள் அகந்தையினால் தங்களை உயர்த்துவதற்காகவோ, நிதி அரசுகளுக்காகப் பணம் திரட்டுவதற்காகவோ அல்லது வியாதியாய் இருந்த மக்களின் நன்மைக்காக மட்டுமோ பயன்படுத்தப்படவில்லை.*

*ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைகளுடன் தேவனிடத்திலிருந்து சத்தியத்தின் வெளிப்*

பாடு ஒன்றும் இணைந்திருந்தது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய புதிய சத்தியங்களை அப்போஸ்தலர்கள் பெற்று, போதிக்கையில் அவர்கள் இயல்பான உலகத்தில் காணப்படுவதற்கு மேலான செயல்களைச் செய்தார்கள். இது, அவர்கள் தேவனால் அதிகாரம் பெற்றார்கள் என்பதை நிரூபித்தது, ஆகையால் அவர்களின் உபதேசம்/போதனை தேவனிடத்திலிருந்து வந்ததாயிருந்தது.

இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிப்பதற்காக அடையாளங்கள் நிகழ்த்தப்பட்டன. யோவான் தமது புத்தகம் ஏன் எழுதப்பட்டது என்பதைக் கூறினார்: "நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும்" (யோவா. 20:30, 31). நாசரேத் ஊரானாகிய இயேசுவே தேவனுடைய குமாரன் என்பதை அப்போஸ்தலர் ஒருவர் போதிக்காதிருந்து, அற்புதம் செய்திருந்தாலும் அதைக் கண்டு ஒருவர் விசுவாசித்திருக்க முடியாது. சுவிசேஷ போதனைக்கு அற்புதங்கள் நிரூபணத் துணையாக இருந்தன.

சுவிசேஷத்தின் இந்தப் புதிய வசனமானது முதலில் கர்த்தரால் உரைக்கப்பட்டது, பின்பு அப்போஸ்தலர்களால் உறுதிப்படுத்தப்பட்டது. இறுதியாக, அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பல விதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே இந்த சத்தியங்களை உறுதிப்படுத்தினார் (எபி. 2:3, 4) .

**உபதேசங்களின் இசைவைக் காட்ட**

அப்போஸ்தலர்கள் தேவனால் தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை மட்டுமே போதித்ததால் அவர்கள் ஒருவருக்கொருவர் முரண்படவில்லை. இரண்டு அப்போஸ்தலர்கள் அற்புதங்கள் செய்வதற்கு தேவனிடமிருந்து வல்லமை பெற்றிருந்தால், அதைத் தொடர்ந்து - தேவனிடமிருந்தே வந்த - அவர்களின் போதனையும் முரண்பாடற்றதாய் இருந்திருக்க வேண்டும். உண்மையில், அதற்கு முன்பே இயேசு, "இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கின்றார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கின்றேன்" (மத். 18:20) என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். இந்த சந்தர்ப்பப் பொருளானது சரியாகப் பயன்படுத்தப்

படும்போது, பேதுருவுக்கு மட்டுமே முன்பு வாக்களிக்கப் பட்டிருந்த "இராஜ்யத்தின் திறவுகோலை" (மத். 16:19) ஒவ்வொரு அப்போஸ்தலரும் பெற்றிருந்தார் என்று காட்டு கின்றது. மத்தேயு 18:18ல், "கட்டுவதற்கும் கட்டவிழ்ப்பதற் கும்" அதிகாரத்தை ஒவ்வொரு அப்போஸ்தலரும் பெறுவார் கள் என்று இயேசு சுட்டிக்காட்டினார். இந்த "கட்டுவது மற்றும் கட்டவிழ்ப்பது" என்பது பரலோக அரியணையில் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, தேவனுடைய சித்தத்தை வெளிப் படுத்துவதற்காக அப்போஸ்தலர்களுக்குத் தரப்பட்ட அதிகாரத்தைக் குறித்தது.

உபதேச சத்தியங்களைப் பற்றி அப்போஸ்தலர்கள் சுயமாக முடிவுகள் எதையும் மேற்கொள்ளவில்லை; ஏற்கனவே பரலோகத்தில் முடிவு செய்யப்பட்டிருந்ததை அவர்கள் இப்பூமியில் வெளிப்படுத்தினார்கள். அவர்கள் தங்களின் போதனைகளில் இப்படிப்பட்ட வெளிப்படுத்துதல்களைச் செய்தபோது, அவர்கள் ஒருவருக்கொருவர் இசைந்திருந்தார் கள். கர்த்தருடைய அற்புதமான வெளிப்படுத்தும் வல்லமை அவர்களின் நடுவிலிருந்தது. கர்த்தர் ஒரே விதமான சத்தியங் களையே ஒவ்வொருவருக்கும் வெளிப்படுத்தினார்.

"இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே ... கூடியிருக்கிறார்களோ" அங்கே அவர்கள் நடுவில் இருப்ப தாக இயேசு கூறிய கூற்றானது பெரும்பாலும் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றபடியாக ஆராதனைக்குக் கூடும் மக்களைக் குறிப்பதில்லை. இக்கூற்றானது, (ஆவியானவரால் கட்டுப்படுத்தப்பட்ட ஊழியம் கொண்ட) அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே (அதிகாரத்திலே) ஒன்று கூடி, கிறிஸ்துவின் புதிய சுவிசேஷத்தைப் போதித்தல் என்ற அவர்களின் ஊழியத்தைச் செய்வதைக் குறிக்கின்றது. அவர்களிடையில் அவரது அதிகாரம் இருந்து, அவர்களை முரண்பாடற்ற சத்தியத்திற்கு வழி நடத்துவதாயிருந்தது.

அவர்களின் போதனைகளில் முரண்பாடு இருந்திருந்தால், குறைந்தபட்சம் அவர்களில் ஒருவர் தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தியிருந்ததைப் போதியாமல் இருந்தார் என்று அர்த்தமாகியிருக்கும். சத்தியமானது தன்னில் தானே முரண் படுவதில்லை. தேவனுடைய வசனமே சத்தியமாய் உள்ளது (யோவா. 17:17), மற்றும் சத்தியம் மட்டுமே பரிசுத்தமாக்கும்

வல்லமையைப் பெற்றுள்ளது. ஆகையால், அப்போஸ்தலர்கள் மற்றும் புதிய ஏற்பாட்டின் ஏவப்பட்ட மற்ற எழுத்தாளர்கள் ஆகியோரால் போதிக்கப்பட்டவைகளில் முரண்பாட்டை ஒருவர் காண முடியாது.

இன்றைய நாட்களில் அற்புத ஊழியம் செய்யும் வல்லமை பெற்றிருப்பதாக உரிமைகோருபவர்கள் தங்கள் உபதேசங்களில் ஒருவருக்கொருவர் முரண்படுகின்றார்கள். இது, அவர்களில் சிலரோ அல்லது அவர்கள் எல்லாருமோ சத்தியத்தைப் போதிப்பதில்லை என்பதைக் காட்டுகின்றது. அவர்களில் சிலர் தவறானவர்களாயிருக்கவேண்டும், தவறானவர்கள் அற்புத ஊழியம் செய்யும் வல்லமையைத் தேவனிடத்திலிருந்து பெற்றிருக்க முடியாது. கள்ள போதகர்களுக்குத் தேவன் அற்புதங்கள் செய்யும் வல்லமையைக் கொடுப்பதில்லை.

இன்றைய நாட்களில் "ஆவியினால் நிறைந்துள்ளதாக" உரிமை கோரிக்கொள்பவர்களில் பலர், வேதாகமத்தின் தெளிவான போதனைகளுக்கு முரண்படுகின்றார்கள். அவர்களின் சில உபதேசங்கள் கர்த்தரின் தெளிவான போதனைகளை மீறுகின்றன. தேவன் தமது தெய்வீக வசனத்திற்கு முரண்படும் கள்ள போதகர்களுக்கு வல்லமையளிக்க மாட்டார். இன்றைய நாட்களில் "அற்புதங்கள் செய்யும் ஊழியர்கள்" உண்மையிலேயே தேவனிடத்திலிருந்துதான் அந்த அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கின்றார்களா இல்லையா என்பதை அறிவதற்கு ஒரே வழி எதுவென்றால், அவர்களின் போதனைகளைச் சோதித்துப் பார்ப்பதேயாகும். அவர்களின் போதனைகள் வேதாகமத்திலிருந்து வராதிருந்தால், "புத்தகத்தில்" இல்லாதிருந்தால், அவர்கள் தேவனுடைய வல்லமையினால் அற்புதங்களைச் செய்வதில்லை என்றாகின்றது. இது அவ்வளவு எளிதாகும். இப்படி உரிமைகோருபவர்கள் செய்பவை இயற்கைக்கு அப்பாற்பட்டதாயிருந்தால், அல்லது இயல்பான கருத்துக்களில் விளக்கப்பட முடியாதிருந்தால், இந்த நிகழ்ச்சிகள் யாவும் சாத்தானிடமிருந்து மட்டுமே வருகின்றன என்ற முடிவு மட்டுமே தொடரக் கூடியதாகின்றது (2 தெச. 2:8-10). சாத்தான் மட்டுமே "அடையாளங்கள் மற்றும் பொய்யான அற்புதங்கள்" ஆகியவற்றினால் மக்களை வஞ்சிக்கக் கூடியவனாய் இருக்கின்றான். தேவன் தவறை உறுதிப்படுத்துவதில்லை. அது ஆதி முதற் கொண்டு பொய்யனும் பொய்க்குப் பிதாவுமா

*யிருக்கிற சாத்தானுடைய வேலையாக இருக்கின்றது (யோவா. 8:44).*

***அவர்கள் போதிப்பதற்கு உதவ***

*ஆதி சபைகளில் ஒன்பது வகையான அற்புத வரங்கள் பயன்படுத்தப்பட்டன (1 கொரி. 12:8-10). அவைகள்: ஞானம், அறிவு, விசுவாசம், குணமாக்குதல், அற்புதங்களைச் செய்தல், தீர்க்கதரிசனம், ஆவிகளைப் பகுத்தறிதல், பற்பல பாஷை களைப் பேசுதல், பாஷைகளுக்கு வியாக்கியானம் பண்ணுதல் ஆகியவைகளாகும். இந்த ஒன்பது வரங்களில், ஆறு வரங்கள் தேவனுடைய வசனத்தைப் போதிப்பது என்ற செயலுடன் நேரடியான ஈடுபாடுள்ளவை என்பது ஆர்வத்திற்குரியதாகும். இப்படிப்பட்ட ஒரு தொடர்பானது கவனிக்கப்படாமல் விடப் படக் கூடாது. விசுவாசம், குணமாக்குதல் மற்றும் அற்புதங்கள் ஆகியவை மறைமுகமாய்ப் பயன்படுத்தப் பட்டன. ஆனால் மற்ற வரங்கள் யாவும் மேசியாவின் அரசாட்சி தொடங்கு கையில் தேவனுடைய வசனத்தைப் போதிப்பதற்கு அவசிய மானவைகளாய் இருந்தன.*

*(1) “ஞானம்” என்பது ஒருவர் தம் அறிந்துள்ள சத்தியங் களை வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் பயன்பாடு செய்யும் வல்லமையாகும்.*

*(2) “அறிவு” என்பது உபதேச சத்தியங்களின் உண்மை களை உறுதிப்படுத்திக் கொள்ளும் வல்லமை ஆகும்.*

*(3) “விசுவாசம்” என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களைச் செய்வதற்குப் பரிசுத்த ஆவியானவர் மக்களுக் குக் கொடுத்த வல்லமை என்ற வரம் ஆகும். பிசாசு பிடித்திருந்த பையனை இயேசு குணமாக்கும் பொழுதும் (மத். 17:14-21) மற்றும் அவர் அத்திமரத்தை சபித்த பொழுதும் (மத். 21:18-21) இவ்வகைப்பட்ட விசுவாசத்தைப் பற்றியே பேசினார். இந்த “விசுவாசம்” என்பது ஒரு அற்புத வரமாக இருந்தது, இது வசனத்தை ஒரு நபர் ஏற்கும் பொழுது பெறும் விசுவாசம் அல்ல (ரோமர் 10:17).*

*(4) “குணமாக்குதல்” என்பது இயல்பான உடலில் உள்ள வியாதியை மாற்றுவதாகும்.*

*(5) “அற்புதங்களைச் செய்தல்” என்பது மரித்தோரை உயிருடன் எழுப்புவதை (அப். 9:36-42) அல்லது சத்தியத்தைப்*

போதிக்கும் வழியில் (எதிர்த்து) நிற்பவரை குருடாக்குவதைக் கூடக் குறிப்பிட முடியும் (அப். 13:8-11).

(6) ''தீர்க்கதரிசனம்'' என்பது தேவனிடத்திலிருந்து சத்தியங்களைப் பெறும் வல்லமையையும் ''அவருக்காக'' அல்லது "அவரின் சார்பாக" பேசுவதையும் குறித்தது. மூல கிரேக்க மொழியில் "தீர்க்கதரிசி" என்ற வார்த்தையானது "க்காக" (for) மற்றும் "பேசுதல்" (to speak) ஆகிய இரு வார்த்தை களின் ஒன்றிப்பாக, இவ்விதமாய் தேவனு"க்காகப் பேசுதல்" என்று அர்த்தப்படுகின்றது.

(7) "ஆவிகளைப் பகுத்தறிதல்" என்பது ஏவுதல் பெற்றுப் பேசுகிறேன் என்பவர் உண்மையிலேயே அவ்வாறு தான் பேசுகின்றாரா என்று அறியும்படி மக்களுக்குத் தரப்பட்ட வரத்தைக் குறித்தது. பகுத்தறிபவர்களுக்கு, ஒருவர் எந்த அதிகாரத்தில் - பரிசுத்த ஆவியானவராலா அல்லது சாத்தானிட மிருந்து வந்த தீய ஆவியினாலா - பேசினார் என்று அறியும் வல்லமை அளிக்கப்பட்டிருந்தது. ஆதி சபையில் அப்போஸ் தலர்கள் இல்லாத வேளையில் இவ்வரம் குறிப்பாகப் பயன் பட்டது. போதகர்களை ஆய்வு செய்வதற்கு நிறைவான புதிய ஏற்பாடு இல்லாதிருந்த ஆதி சபைகளில் பகுத்தறியக் கூடியவர் களாய் ஒவ்வொரு சபையிலும் இருந்த நபர்கள் ஆய்வு செய்வதில் பயன் மிக்கவர்களாய் இருந்தார்கள்.

(8) "பற்பல பாஷைகளில் பேசுதல்" என்பது அறிந்திராத அல்லது கற்றிராத ஆனால் வழக்கத்தில் இருந்த அந்நிய பாஷைகளைப் பேசும் அற்புத வரத்தைக் குறித்தது. சபை தொடங்கிய வேளையில் இதை அப்போஸ்தலர்கள் செய்தார்கள்/பேசினார்கள் (அப். 2:4). பலஸ்தீனத்தைத் தவிர மற்ற நாடுகளில் இந்த மொழிகள் பயன்படுத்தப்பட்டன, ஏனெனில் கேட்டவர்கள், ''அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே'' (அப். 2:8) அப்போஸ்தலர்கள் பேசக் கேட்டார்கள்.

(9) "பாஷைகளுக்கு வியாக்கியானம் கொடுத்தல்" என்பது கூடியிருக்கும் கூட்டத்தார் இம்மொழிகளைப் புரிந்து கொள்ளத்தக்க மொழிகளில் மொழியாக்கம் செய்வதற்கான வரம் ஆகும். ஒருவேளை, எபேசுவில் கூடியிருந்த கூட்டத் தாரில் பலர் கிரேக்க மொழி மட்டும் பேசுபவர்களாகவும் மற்றவர்கள் எபிரெய மொழி மட்டும் பேசுபவர்களாகவும்

இருந்திருக்கலாம். பேசுபவர் கிரேக்க மொழியில் பேசினால், எபிரெய மொழி மட்டும் அறிந்த அக்கூட்டத்தில் உள்ளவர் களின் நன்மைக்காக ஒருவர் அந்த கிரேக்க உரையை எபிரெய மொழியில் மொழியாக்கம் செய்திருக்கக் கூடும்.

புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலங்களில் இருந்த இவ்வரங்களோ அல்லது அற்புதங்களோ அல்லது இவ்வரங் களைப் பெற்றுக் கொண்டதோ பாவங்களை மன்னித்ததென்று ஒருபொழுதும் குறிப்பிடப்படவில்லை. இவ்வரங்களைப் பெற்றிருப்பதென்பது கர்த்தருடைய இராஜ்யத்தில் ஒருவர் மறுபடி பிறப்பதற்குக் காரணமாயிற்றென்றும் ஒருபொழுதும் குறிப்பிடப்படவில்லை. இந்த அற்புதங்களையும் அடையாளங் களையும் ஏற்ற முறையில் பயன்படுத்துவதென்பது வசனத் தைப் போதிப்பதற்கும் அது உண்மையிலேயே தேவனிடத்தி லிருந்தே வந்தது என்பதை உறுதிப்படுத்துவதற்கும்தான் முக்கிய வலுவைக் கொடுத்தது.

## நடபடிகளில் விளக்கப்பட்டுள்ளபடி அற்புதங்களின் நோக்கம்

நடபடிகள் என்பது அப்போஸ்தலர்களின் ஊழியத்தில் தேவன் தம் வசனத்தை எவ்விதம் உறுதிப்படுத்தினார் என்பதன் பதிவேடாக இருக்கின்றது. பரிசுத்த ஆவியினால் பலம் அடைந்தவர்களாக அப்போஸ்தலர்கள் செயல்படச் சென்றார் கள். புதிதாகப் பெற்ற வெளிப்படுத்துதல்களை அவர்கள் பிரசங்கிக்கையில், அடையாளங்களையும், புதுமைகளையும் மற்றும் அற்புதங்களையும் அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் சார்பாகப் பேசுவதை நிரூபிப்பதற்காகச் செய்தார்கள்.

சுவிசேஷமானது அதன் முழுமைத் தன்மையோடு பிரசங்கிக்கப்பட்டு, விசுவாசிகளை மனந்திரும்பி ஞானஸ் நானம் பெறும்படி அழைத்த (அப். 2:4-11, 38, 41) முதல் நாளாகிய பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர்கள் வெளியரங்கமாகவும் தெளிவாகவும் அற்புதங்களைச் செய்தார் கள். இந்த வேளையில், அப்போஸ்தலர்கள் மட்டுமே எந்த வொரு அற்புதத்தையும் செய்தார்கள் என்று லூக்கா குறிப் பிட்டார், ஏனெனில் இவ்வரங்களை மற்றவர்களுக்கும்

*தரும்படி அவர்கள் அப்பொழுது மற்றவர்களின் மீது கைகளை வைத்திருந்ததில்லை. பிறவிச் சப்பாணியொருவரைப் பேதுரு குணப்படுத்தியபின் தேவாலயத்தில் இருந்த சாலொமோன் மண்டபத்தில் போதிக்க வாய்ப்பைப் பெற்றிருந்தார் (அப். 3:7-10; 4:14).*

*பின்னாளில், திரளான கூட்டத்தாரைக் குணமாக்கிய நிகழ்ச்சியானது போதிப்பதற்கும், தேவனால் அப்போஸ்தலர் களுக்குத் தரப்பட்ட வல்லமைகளை உணருவதற்கும் மேலும் ஒரு வாய்ப்பைக் கொண்டு வந்தது (அப். 5:12-16), இந்த அற்புதங்கள் சபையில் பலரைக் கொண்டு வந்து சேர்த்தது (வ. 14). ஸ்தேவானின் வல்லமை நிறைந்த போதனையானது அவர் செய்த அற்புதங்களினால் உறுதிப்படுத்தப்பட்டது (அப். 6:8). ஏனெனில் அற்புத ஊழியம் செய்யும் வல்லமைகளை அப்போஸ்தலர்கள் அவர் மீது கைகளை வைத்ததினால் கொடுத்திருந்தார்கள் (வ. 6). பிலிப்பின் பிரசங்கத்தைக் கேட்டவர், "பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு" (அப். 8:6) பதில்செயல் செய்தார்கள்.*

*பேதுரு, தொற்காளை மரித்தோரிலிருந்து எழுப்பிய பொழுது, "அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களா னார்கள்" (அப். 9:42). பிற்பாடு, பேதுரு கொர்நேலியுவின் வீட்டிற்கு அழைக்கப்பட்டார். அவர் புறஜாதியாரின் இல்லத் திற்குச் செல்ல வேண்டும் என்பதை இரண்டு அற்புதங்கள் அவருக்கு உறுதிப்படுத்தின. வானத்திலிருந்து இறங்கின ஒரு விதமான கூட்டின் தரிசனம் முதலாவது அற்புதமாயிருந்தது. இந்தக் கூட்டில் (பெரிய, துப்பட்டி போன்ற பொருளில்) எல்லா விதமான விலங்குகளும் இருந்தன, பேதுரு அவற்றை அடித்துப் புசிக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டார் (அப். 10:9-16). இந்தப் புறஜாதியாரின் வேலைக்காரருடன் பேதுரு புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் குரல் கொடுத்தது இரண்டாவது அற்புத மாயிருந்தது (அப். 10:17-20). இவ்விரு அற்புதங்களும் வழக்கத்திற்கு மாறானவைகளாய் இருந்தன, இவைகள் தேவன் தம்முடைய சித்தத்தை தம் சொந்த அப்போஸ்தலர்களுக்கு உறுதிப்படுத்தப் பயன்பட்டன. வழக்கமாக, அற்புதங்கள் எனப்படுபவை போதிக்கப்படாத, இயேசுவில் விசுவாசமில்லா தவர்களிடத்தில் தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்து*

வதற்காகவே பயன்பட்டன.

இந்த நிகழ்ச்சியானது வழக்கமற்ற இன்னொரு அற்புதத்தைக் கொண்டு வந்தது; உண்மையில் அது ஒருமுறை மட்டும் நடந்த நிகழ்ச்சியாகும். பரிசுத்த ஆவியானவரைக் கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் ஆகியோருக்கு அனுப்பியதன் மூலம் தேவன் தமது விருப்பங்களைப் பேதுருவுக்கும் அவருடன் இணைந்து சென்ற ஆறு சகோதரர்களுக்கும் உறுதிப்படுத்தினார். ஆவியானவரால் வல்லமை பெற்ற அவர்கள், "பல பாஷைகளைப் பேசி தேவனைப் புகழத்" (அப். 10:44-46) தொடங்கினார்கள். இது அவர்கள் கிறிஸ்தவர்களாகும் முன்னதாகவே நடைபெற்றது! அவிசுவாசிகள் - இன்னும் கிறிஸ்தவராகாதவர்கள், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று இன்னமும் அறியாதவர்கள் - தேவனால் இவ்விதமாய்ப் பயன்படுத்தப்பட்டது திகைப்புக்குரியதாய் இருக்கின்றது! ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் இது அவசியமாயிருந்தது. இனமேன்மை பாராட்டுதல் கொண்டிருந்த - பேதுரு உட்பட - அந்த யூதர்கள், புறஜாதியாருக்குப் பிரசங்கித்து, அவர்களைக் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானப்படுத்தி, கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் என்று அவர்களுடன் ஐக்கியம் கொள்வதை சரியானதென்று ஏற்றுக் கொள்ளும்படி செய்ய வேண்டியதாயிருந்தது. ஆகையால், "வசனத்தை உறுதிப்படுத்துவதற்காக" தேவன் இம்முறை தம் சொந்த அப்போஸ்தலர்கள் மற்றும் அவிசுவாசிகளிடத்தில் இன்னொரு அற்புதத்தைப் பயன்படுத்தினார்.

பவுல் தமது முதலாம் ஊழியப் பயணத் தொடக்கத்தில் எலிமா என்ற மந்திரவாதி சத்தியத்தைப் பிரசங்கித்தலுக்குத் தடை செய்ததினால் அவன் கண்களைக் குருடாக்கினார். அப். 13:12, "அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக் குறித்து அதிசயப்பட்டு விசுவாசித்தான்" என்று கூறுகின்றது. மறுபடியும், ஒரு அற்புதமானது தேவனிடத்திலிருந்து வந்த போதனைகளை உறுதிப்படுத்தியது.

பிலிப்பியில் ஒரு இளம் வேலைக்காரியிடமிருந்து குறிசொல்லும் சாத்தானுடைய ஆவியைப் பவுல் விரட்டிய நிகழ்ச்சியானது அந்த நகரில் ஒரு கலகத்திற்குக் காரணமாயிற்று. அவளுடைய எஜமானர்கள் தங்களின் ஆதாயத்திற்கான

நம்பிக்கை அற்றுப் போனதைக் கண்ட பொழுது பவுலையும் சீலாவையும் அநியாயமாகச் சிறையில் அடைக்கச் செய்தார்கள். பவுலும் சீலாவும் சிறையில் அடைக்கப்பட்டிருந்ததால், பிற்பாடு அவர்கள் அந்தச் சிறைச்சாலைக்காரருக்கும் அவருடைய குடும்பத்திற்கும் போதிக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள் (அப். 16:16-34). அற்புதமாய் நடந்த ஒரு பூமியதிர்ச்சியானது சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து விட்டது; அதைத் தொடர்ந்து நடந்த வினோதமான நிகழ்ச்சிகள் பவுலும் சீலாவும், தாம் கவனிக்க வேண்டிய மனிதர்கள் என்று சிறைச்சாலைக்காரரை நம்ப வைத்தன.

பவுல் தமது மூன்றாவது ஊழியப்பயணத்தில், செய்ய முடிந்த அற்புதங்களின் காரணமாக, எபேசுவில் போதிக்க வியத்தகு வாய்ப்புகளைப் பெற்றிருந்தார். சாத்தானின் கட்டுப்பாட்டில் இருந்த அசுத்த ஆவிகள் பல இருந்த போதிலும் எண்ணற்ற பதில்செயல்கள் அங்கு நடைபெற்றன (அப். 19:11-20). பவுலின் கைகளினால் தேவன் செய்த அற்புதங்கள் வசனத்திற்கு வளர்ச்சியையும் வெற்றியையும் கொண்டு வந்தன (வ. 20). அதாவது, வசனத்தின் செயலூக்கமானது மக்கள் மத்தியில் பெருகியது. பவுல் கூறுவதைக் கவனிக்கவும், அவர் போதித்த சத்தியத்திற்கு பதில்செயல் செய்யவும் எபேசியர்கள் விருப்பம் கொண்டார்கள், இந்த அற்புதங்களினால் அவர்களுக்கு வசனமானது உறுதிப்படுத்தப் பட்டது. பிறகு இந்த அற்புதங்கள் சத்தியத்தின் வெளிப்பாட்டுடன் விடுவித்துக் கொள்ள முடியாதபடி பிணைக்கப்பட்டதை நாம் காணுகின்றோம்.

இந்த அற்புதங்கள் அற்புதங்களாய்த்தான் இருந்தன என்பது பற்றி எவரொருவரும் கேள்வியெழுப்பவில்லை, ஏனென்றால் அவைகளின் விளைவுகள் அவ்வளவு தெளிவாய் இருந்தன. அப்போஸ்தலர்களும் மற்றவர்களும் தேவனுடைய செல்வாக்கின் கீழ் இருந்ததையும், ஆகையால் அவர்கள் போதித்த வசனங்கள் தேவனிடத்திலிருந்து வந்ததையும் அவை நிரூபித்தன. இந்த அற்புதங்கள் வசனத்தை உறுதிப்படுத்தின, மற்றும் போதகர்களின் உண்மைத் தன்மையைக் காண்பித்தன. ஒரு அற்புதம் கூடப் பாவங்களை மன்னிப்பதற்கு ஒருமுறை கூடப் பயன் படுத்தப்படவில்லை. ஒரு அற்புதம்கூட ஒரு நபர் மறுபடி பிறப்பதற்குக் காரணமாகவில்லை. அற்புதத்தைப்

பெற்றுக் கொண்ட எவரொருவரும் அற்புதத்தின் கிரியை யினால் கிறிஸ்தவராகவில்லை.

முன்பு குறிப்பிடப்பட்ட ஒன்பது வரங்களையும் ஒவ்வொரு அப்போஸ்தலரும் பெற்றிருந்தார்கள், அந்த அற்புதத்தை நிகழ்த்தக் கூடியவர்களாயும் இருந்தார்கள்.[2] மற்றும் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை மற்றவர்கள் மேல் வைத்து இந்த அற்புத ஊழிய வல்லமைகளை அவர்களுக்குத் தரக் கூடியவர்களாய் இருந்தார்கள் (அப். 8:14-17). வேறு எவரும் இவ்விதமாக இவ்வரங்களைத் தர முடியவில்லை. எடுத்துக்காட்டாக பிலிப்பு சமாரியாவில் இருந்த போதிலும் எருசலேமில் இருந்த அப்போஸ்தலர்கள், இவ்வரங்களைக் கொடுக்கும்படி பேதுருவையும், யோவானையும் சமாரியா வுக்கு அனுப்ப வேண்டியிருந்தது, பிலிப்பு அற்புதங்களைச் செய்ய முடிந்தது, ஆனால் அவர் ஒரு அப்போஸ்தலர் அல்ல; இவ்விதமாக அவர் இவ்வரங்களில் எதையும் மற்றவர்களுக்குத் தர முடியவில்லை. புதிதாய் மனம் மாறியவராய் இருந்த சீமோன் என்பவர், அப்போஸ்தலர்களின் வரம் தரும் வல்லமை யைப் பார்த்து, அந்த அற்புத வல்லமையை விலை கொடுத்து வாங்க விரும்பினார். அவருக்கு இந்த ஊழியத்தில் (அவர் ஒரு அப்போஸ்தலராய் இராதபடியினால்) பங்கில்லை என்று அவருக்குக் கூறிய பேதுரு, அப்படிப்பட்ட துன்மார்க்கமான பேராசை கொண்ட எண்ணப் போக்கில் இருந்து மனந் திரும்பும்படியும் அவரை வற்புறுத்தினார் (அப். 8:18-24).

ஒன்பது வரங்களின் அட்டவணையானது வெளிப்படுத்து தலின் முழுமைக்கும் ஆதி சபையின் பாதுகாப்பிற்குமான தேவனின் திட்டத்திற்கு ஆதாரம் தருகின்றது. பவுல் தம் பயணத்தைத் தொடர்ந்த போது கொரிந்து சபையார் அநுபவித்தது போல அப்போஸ்தலர் எவரும் இல்லாத வேளையில், தொடர்ந்து சுவிசேஷத்தைப் போதிப்பதற்கும் கள்ள போதகர்களிடமிருந்து சபையைப் பாதுகாப்பதற்கும், ஏவுதல் பெற்ற வரங்கள் உடையவர்களாய் மக்களை சபையில் விட்டுச் செல்லுதல் அவசியமாய் இருந்தது. இன்னமும் அவர்கள் நிறைவு செய்த புதிய ஏற்பாட்டை பெற்றிருக்க வில்லை.

இன்றைய நாட்களில் எழுதப்பட்ட வசனத்தைக் கொண்டு மட்டுமே சபைகள் பாதுகாக்கப்படவும், பக்திவிருத்தி

அடையவும் முடியும். இது நிறைவானதாகவும், தேவையான எல்லாமுமாகவும் உள்ளது. இது "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசம்" (யூதா 3) ஆகும். பவுலின் நாட்களில் எழுதப்பட்ட வசனம் இல்லாதிருந்ததால், ஆதி சபைகளைப் பாதுகாக்கவும், பக்தியூட்டவும் ஆவியான வரின் வரங்களைப் பயன்படுத்தியது தொடர்ந்தது. சபைகளில் இந்த ஒன்பது வரங்களையும் செயல்படுத்தக் கூடிய மக்களை அப்போஸ்தலர் ஒருவர் விட்டுச் சென்றார் என்பது உறுதி. வரங்கள் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன (1 கொரி. 12:7, 11). அப்போஸ்தலர்களைத் தவிர வேறு எவரும் இந்த ஒன்பது வரங்களையும் ஒருசேரப் பெற்றிருந்ததில்லை மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவரும் அற்புத வரங்களைப் பெற்றிருந்ததில்லை (1 கொரி. 12:29, 30). இருப்பினும், ஒவ்வொரு சபைக்குள்ளும் இந்த ஒன்பது வரங்களும் நிச்சயமாக இருந்தன.

## அற்புதங்கள் நிறைவேற்றத்தின் நோக்கம்

தேவனிடத்திலிருந்து வந்த வெளிப்படுத்துதல் உறுதி செய்யப்பட்ட பிறகு, அதை மறுபடியும் உறுதி செய்வது அவசியமில்லை. தேவனிடத்திலிருந்து வந்த அடையாளங்கள் அவைகளின் பணியைச் செய்து, அப்போஸ்தலர்களின் வசனத்தை உறுதிப்படுத்தின (மாற். 16:20). போதனை என்பது வார்த்தையிலா அல்லது எழுத்திலா என்பது எந்த வித்தியாசத் தையும் ஏற்படுத்துவதில்லை; அது சத்தியமாக இருந்ததால் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அற்புதங்களின் பிற தேவையைச் சபை பெற்றிருக்க வில்லை. அடையாளங்களுக்கான கூறப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது: வசனமானது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வுறுதிப்பாடானது அற்புதம் செய்யும் வல்லமையை வெளியேற்றியது. இன்றைய நாட்களில் பாஷைகளில் பேசுவதாகவும், அற்புதங்கள் செய்வதாகவும் உரிமைகோரும் எவரும் இயேசுவின் நாட்களில் இருந்த யூதர்களைப் போன்றவரே ஆவார். தன் நோக்கத்தை

*நிறைவேற்றியிருந்ததால் (லூக். 24:44, 45) வழக்கில் இல்லாத (எபி. 8:13) நியாயப்பிரமாணத்தை அந்த யூதர்கள் விடாமல் பிடித்துக் கொண்டிருக்க விரும்பினார்கள். அது போலவே, தற்காலத்தில் அற்புதங்கள் செய்வதாக உரிமை கோருபவர்கள் ஏற்கனவே நோக்கத்தை நிறைவேற்றியுள்ள ஒரு காலம் மற்றும் ஊழியத்தை விடாமல் பிடித்துக் கொண்டிருக்க விரும்புகின் றார்கள். தேவனுடைய வெளிப்படுத்துதல்கள் நிறைவடையும் போது அற்புத ஊழியங்கள் ஒழிந்து போகும் என்று பவுலும் கூட 1 கொரிந்தியர் 13:8-10ல் முன்னுரைத்தார்.*

*அப்போஸ்தலர்கள் மட்டுமே அற்புத வரங்களைக் கொடுக்க முடிந்தது, அவ்வாறு செய்வதற்கு எந்த ஒரு அப்போஸ்தலரும் இன்றைய நாட்களில் இல்லை. அப்போஸ்தலர் ஒருவர் கைகளை வைக்காமல் இந்த வரங்கள் நேரடியாக தேவனிடத்திலிருந்து வந்த இரு நிகழ்ச்சிகள் அப். 2 மற்றும் 10ம் அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சிகளில் "ஒரே விதமான வரமே" அருளப்பட்டதாகப் பேதுரு குறிப்பிட்டார் (அப். 11:17); இவ்விரு நிகழ்ச்சிகளுமே பரிசுத்த ஆவிக்குள் ஞானஸ்நானம் பெறும் காலங்கள் என்று குறிக்கப்பட்டன (மத். 3:11; அப். 11:15-17). அப்படிப்பட்ட ஞானஸ்நானமானது அந்த நிகழ்ச்சிகளில் எந்த மக்களையும் அவர்களின் பாவங்களில் இருந்து இரட்சிக்கவோ அல்லது அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கவோ இல்லை. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானமானது முற்றிலும் மாறுபட்ட ஒரு நோக்கத்திற்கானதாகும்: அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்தைச் செய்வதற்காகக் கர்த்தரின் சித்தத்தின்படி வல்லமை தரப்பட்டதை நிறைவேற்றுதலும், யூதப் பரம்பரையில் வந்த கிறிஸ்தவர்கள், புறஜாதியாரை கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியத்தில் சம அந்தஸ்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை நிரூபிப்பதற்கும் ஆகும். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் ஞானஸ்நானமானது சகாப்த நடைமுறைகளை உண்டாக்கப் பயன்பட்டது.*

*இது இன்றைய நாட்களில் தேவனால் அற்புதங்கள் பயன்படுத்தப்படாதது ஏன் என்பதற்கு மூன்று காரணங்களைச் சுருக்கி உரைக்கின்றது: (1) அற்புதங்களின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டு முடிவடைந்தன. (2) கிறிஸ்துவின் சுவிசேஷத்தினுடைய வெளிப்பாடு நிறைவடையும்போது*

அற்புதங்கள் ஒழிந்து போக வேண்டியிருந்தன, இதை பவுல் ஏவுதலினால் முன்னுரைத்திருந்தார். (3) எல்லா அப்போஸ்தலர் களும் மரித்துவிட்டதால், இந்த ஒன்பது வரங்களையும் பெற்றுக் கொள்ளும் வழிமுறையானது இப்பொழுது இல்லை.

# முடிவுரை

தேவனுடைய வசனம் மாத்திரமே பாவிகளைப் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்க முடியும் (யோவான் 8:31, 32). மக்களுக்கு சத்தியம் எவ்விதம் போதிக்கப்பட்டது, தேவனுடைய வல்லமையால் செய்யப்பட்ட அற்புதங்கள் எவ்விதம் அவர்களை அந்த சத்தியத்திற்குள் வழி நடத்திற்று மற்றும் அந்த சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்ததன் மூலம் அவர்கள் எவ்விதம் தேவனுடைய கிருபைக்குள் பிரவேசிக்க முடிந்தது என்பவற்றைப் பதிவு செய்துள்ள ஒரே புத்தகம் அப்போஸ் தலருடைய நடபடிகளே ஆகும்.

---

குறிப்புகள்

[1]இந்தப் பின்னாளைய எழுத்துக்களில், 1, 2 தீமோத்தேயு; தீத்து; எபிரெயர்; 1, 2 பேதுரு; 1, 2, 3 யோவான்; மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவை உள்ளடங்கும். [2]ஒவ்வொரு அப்போஸ்தலரும் இந்த ஒன்பது வரங்களையும் பெற்றிருந்தார்கள் என்பது மறைமுகக் கருத்தாய் உள்ளது. "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள்" (2 கொரி. 12:11, 12) என்று பவுல் தாம் கொண்டிருந்ததாகக் குறிப்பிட்ட ஒன்றுக்கு மேற்பட்ட வல்லமைகள் அவர் மற்ற அப்போஸ்தலர்களுக்கு இணையானவர் என்பதை நிரூபித்தன. இந்த ஒன்பது வரங்களும் கொரிந்து சபையில் இருந்ததாக அறியப்பட்டுள்ளதாலும் (1 கொரி. 12:7-11) மற்றும் பவுல் ஒருவரே கொரிந்து சபைக்குச் சென்றிருந்த அப்போஸ்தலராவார் என்பதாலும், அங்கிருந்த சபை உறுப்பினர்கள் தங்களின் எல்லா வரங்களையும் இந்த ஒரு அப்போஸ்தலர் மூலமாகத் தான் பெற்றிருக்க வேண்டும்.